அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2004

எனது இலக்கம்: தா/9/4/2-24
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07,
2004.12.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச்
செயலாளர்கள் மற்றும் திணைக்கள
தலைவர்கள் யாவருக்கும்.

<u>அரசியல் உரிமைகளை பயன்கொள்ளுதல். தாபன விதிக்கோவையின் **XXXII** ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவை திருத்தம் செய்தல்.</u>

தாபன விதிக்கோவையில் XXXII ஆம் அத்தியாயத்தின் 1:3 பிரிவிற்கு பதிலாக பின்குறிப்பிடும் பிரிவை பதிலீடு செய்யப்படுகிறது.

1:3 -“” இனிவருங் காலங்களில் தேர்தலில் போட்டி இடுவதற்கு கருதும் மேற்படி 1:1 பிரிவில் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்குரிய அலுவலர்கள் தமது அபேட்சகர் நிலையை உறுதிப்படுத்துவதற்காகவோ அல்லது அவ்வாறான தேர்தலின் போது தன்னிலை சாதகமாக அமையுமா, இல்லையா என்பதை பரிசீலனை செய்து பார்ப்பதற்காகவோ அல்லது ஆரம்ப அலுவல்களை மேற்கொள்ள கருதுவதாயின் அவர் அந்த அலுவல்கள் எதனையும் செய்வதற்கோ அல்லது வேறொருவரைக் கொண்டு செய்து கொள்வதை அனுமதித்துக்கொள்ளவோ முன்னர் அரசு சேவையில் தாம் வகிக்கும் பதவியிலிருந்து இராஜினாமா செய்தல் வேண்டும். ஆயினும் 10 வருடங்கள் அல்லது அதற்கு கூடிய சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அத்தகைய அலுவலரொருவர் சனாதிபதி பாராளுமன்ற, மாகாண சபை அல்லது உள்ளூராட்சி தேர்தலில் வேட்பாளர் ஒருவராக போட்டியிடுவதாயின் வேட்புமனு ஒப்படைக்கும் திகதிக்கு குறைந்தபட்சம் 10 நாட்களுக்கு முன்பு நியமன அதிகாரிக்கு அறிவித்து தேர்தலுக்காக வேட்புமனு கையளிப்பதற்கு 07 நாட்களுக்கு முன்பிருந்து தாம் வகிக்கும் பதவியில் ஓய்வு பெறலாம். அவ்வாறு ஓய்வு பெறுவதற்கென்றால் அவரால் அரசிற்கு செலுத்த வேண்டியுள்ள சகல கொடுப்பனவுகளையும் சீராக்கல் செய்ய வேண்டியதுடன், கட்டாய ஒப்பந்த சேவைக் காலமாக இருப்பின் அதற்காக ஒப்பந்த பணத்தை செலுத்தி ஒப்பந்தத்திலிருந்து விடுபடுதல் வேண்டும். அவ்வாவறு ஓய்வு பெறும் ஒருவருக்கு அவரது வயது 55 பூர்த்தியாகும் திகதி முதல் ஓய்வூதியமும் பணிக்கொடையும் உரித்தாகும்.””

02. தாபன விதிக்கோவையில் XXXII ஆம் அத்தியாயத்தில் 1:4 உப பிரிவு நீக்கப்படுகிறது.

03. தேர்தல்களில் போட்டியிடுவதற்காக இராஜினாமா செய்துள்ளவர்களும், 10 வருட ஓய்வூதிய சேவைக் காலத்தை கொண்டுள்ளவர்களுமான அலுவலர்களுக்கு அவ்வேற்பாடுகளின் கீழ் ஓய்வூதிய உரித்தை அளிப்பதற்காக அவர்களின் இராஜினாமா கடிதங்கள் ஓய்வுபெறச் செய்வதற்காக செய்யப்பட்ட கோரல்களாக கருதப்படும்.

04. அதன்படி ஓய்வூதியம் செலுத்த இயன்றவாறு ஏற்பாடுகளை செய்து ஓய்வூதிய பிரமாணக் குறிப்பை தேவைக்கேற்ப திருத்தம் செய்வதற்கு ஓய்வூதிய பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

05. இவ் ஏற்பாடுகளின் கீழ் ஓய்வூதியத்திற்காக தகைமைபெறுபவர்கள் 55 வயதை அடைகின்ற திகதி அல்லது 2004.01.01 ஆந் திகதி ஆகிய இரு திகதிகளில் பின்னராக வரும் திகதியிலிருந்து ஓய்வூதியம் செலுத்தப்படும்.

ஒப்பம்/எஸ்.சீ.மான்னப்பெரும,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.